பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

14 12 2025 SUNDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரிட்டன் துணை பிரதமர் திரு. டேவின் லேமி-யுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று வெளியுறுவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. விளையாட்டுத் துறையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

4. தாய்லாந்து - கம்போடியா நாடுகள் போர் நிறுத்தத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று தரம்சாலாவில் நடைபெறுகிறது.

>>>>><<<<<

பிரிட்டன் துணை பிரதமர் திரு. டேவின் லேமி-யுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று வெளியுறுவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அபுதாபியில் நடைபெற்று வரும் சர்வதேச விவகாரங்கள் குறித்த வருடாந்திர கூட்டத்திற்கு இடையே, அவருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

Luxembourg நாட்டின் துணைப் பிரதமர் திரு. Zavier Bettel மற்றும் மால்டோவா நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. Mihai Popsoi-ஐயும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

ஹிமாச்சலப்பிரதேச மாநிலம், சிம்லாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் சிறந்த நிர்வாக நடைமுறைகள் மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு உரிய காலத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டுவரும் நாடாக உருவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத், தூய்மை இந்தியா இயக்கம் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து திரு. ஜெ.பி. நட்டா பட்டியலிட்டார்.

>>>>><<<<<

ரயில் பயணிகளின் வசதிக்காக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் ரயில்வே துறையின் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அவர்,ரயில் முன்பதிவிற்கான IRCTC இணையதளத்தில் போலியான கணக்குகள் தொடங்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக, 3 கோடிக்கும் அதிகமான போலி கணக்குகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வந்தேபாரத் ரயில்களில் உள்ளூர் உணவு வகைகளை பயணிகளுக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக ரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாற்றுத் திறனாளிகள் தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்கான களமாக, திவ்ய கலாமேளா கண்காட்சி ஒரு வாய்ப்பாக அமையும் என்று மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்த கண்காட்சியை தொடங்கி வைத்து பேசிய அமைச்சர், இத்தகைய நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

இந்த கண்காட்சி, இம்மாதம் 21ஆம் தேதிவரை நடைபெறும்.

>>>>><<<<<

விளையாட்டுத் துறையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

உத்ராகண்ட் மாநிலம், Pauri-யில் நாடாளுமன்ற தொகுதி விளையாட்டுப் போட்டிகளை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் இளம் விளையாட்டு வீரர்கள் தங்களது திறனை வெளிப்படுத்துவதற்கான தளமாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச விளையாட்டு போட்டிகளில் அதிக எண்ணிக்கையிலான பதக்கங்களை வெல்லும் வகையில், விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>><<<<<

இந்தியா - ஜார்ஜியா இடையே வர்த்தகம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த ஆலோசனைகள் நடைபெற்றதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இருநாடுகளும் மேலும் பல்வேறு புதிய துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 14ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வழங்குகிறார்.

>>>>><<<<<

அஞ்சலகங்கள், தபால் பட்டுவாடா செய்வதுடன், வங்கி, காப்பீடு உள்ளிட்ட அரசின் சேவைகளை வழங்கும் நிறுவனமாக உருவெடுத்துள்ளதாக மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ர மாநிலம், கோலாப்பூரில் நடைபெற்ற கிராமப்புற அஞ்சலக சேவைகள் திட்டத்தின் கீழ், கோவா மற்றும் புனே-யில் உள்ள கிராமப்புற பகுதிகளில் அஞ்சலக சேவைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 65 ஆயிரம் அஞ்சல் அலுவலகங்கள் மூலம். ஆறரை லட்சம் கிராமங்களுக்கு அஞ்சல் சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>><<<<<

பாகிஸ்தானின், பலுசிஸ்தான் மாகாணத்தில் காலரா தொற்று பாதிப்பு காரணமாக, உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இந்நோய் பாதிப்பு காரணமாக, 6 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் தண்ணீரில் உள்ள மாசுபாடு காரணமாக, பாக்டீரியாவால் இந்த தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

தாய்லாந்து - கம்போடியா நாடுகள் போர் நிறுத்தத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தத்தை இருநாடுகளும் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் இதுவரை இறுதி செய்யப்படவில்லை என்று கம்போடியா தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், மக்கள் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக கூறினார்.

வேளாண் துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

தில்லி, ஹரியானா, சண்டிகர், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா, பஞ்சாப் மாநிலங்களிலும் கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா, தெலங்கானா மாநிலங்களின் ஒரு சில இடங்களில் இன்று பனிப்பொழிவு நிலவும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மேலும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காற்று தர மேலாண்மை ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தரம்சாலாவில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

>>>>><<<<<

உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-0 என்ற போட்டி கணக்கில் எகிப்தை வென்றது.

இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில், இந்தியா – ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

தேசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் ஹரியானாவின் Raiza Dhillon தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் Skeet பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>END<<<<<